பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 57

04.08.2026

லஞ்சம் கேட்டு பெற்ற துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) கைது

புகார்தாரர் திரு.ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், கோவில்பாளையம், காங்கேயம் தாலுகா, திருப்பூர் மாவட்டத் தில் வசித்து வருகிறார். புகார்தாரருக்கு ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள குவாலிபாளையம் மற்றும் சேனாதிபாளையம் சி.எஸ்.ஐ அரசு உதவி பெறும் பள்ளிகளில் தலா ஒரு சமயலரை கட்டும் பணிக்கும், சேனாதிபாளையம் ஆதி திராவிடர் காலனி மற்றும் வெள்ளப்பநாயக்கன் வலசு ஆகிய இடங்களில் தலா ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணிகளுக்கான பில் தொகையினை அனுமதித்து வழங்கியதற்காக திரு.செந்தில்குமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது), வெள்ளகோவில் வட்டார வளர்ச்சி அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் தனக்கு கமிஷனாக ரூ.20,000/- லஞ்சமாக தர வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருப்பூர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 04.08.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.செந்தில்குமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) லஞ்ச பணம் ரூ.20,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 57
04.08.2026

Deputy Block Development Officer (General) Arrested in Trap for Demand and Acceptance of Bribe

On the basis of a complaint received from Thiru Ravichandran, a contractor residing at Kovilpalayam, Kangeyam Taluk, Tiruppur District, the Directorate of Vigilance and Anti-Corruption, Tiruppur Detachment, registered a case against Thiru Senthilkumar, Deputy Block Development Officer (General), Vellakovil Panchayat Union, Tiruppur District, for alleged demand of illegal gratification.

The complainant had executed two primary school kitchen construction works at Kuvalipalayam and Senathipalayam CSI Government-Aided Schools, and two borewell works at Senathipalayam Adi Dravidar Colony and Vellappanaicken Valasu under the Vellakovil Panchayat Union. The bills pertaining to the above works had already been processed, sanctioned, and passed for payment.

It is alleged that Thiru Senthilkumar demanded a sum of **Rs.20,000/-** from the complainant as illegal gratification (REWARD) for sanctioning and releasing the bill amount.As the complainant was unwilling to pay the bribe, he approached the Directorate of Vigilance and Anti-Corruption, Tiruppur Detachment, and lodged a complaint.

Based on his complaint, a case was registered and a trap was organized on **04.08.2026**. During the trap proceedings, Thiru Senthilkumar, Deputy Block Development Officer (General), was caught red-handed while receiving the bribe amount of **Rs.20,000/-** from the complainant.

The tainted money was recovered and Thiru Senthilkumar was arrested and subsequently remanded to judicial custody. Further investigation in the case is in progress.